

# கிறுக்கல்கள் சித்திரமாகின்றன

பி. அமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கல்கள் சித்திரமாகின்றன

பி.அமல்றாஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உயிர்
உருவம்
உவகை
உலகம்
யாவும் கொடுத்து
வாழவைக்கும்
அம்மை அப்பனுக்கு
சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : கிறுக்கல்கள் சித்திரமாகின்றன |
| ஆசிரியர் | : பி.அமல்றாஜ் |
| முதற்பதிப்பு | : 2011 - சனவரி |
| பக்கங்கள் | : 16 + 76 = 102 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | : R.சுதர்சன் |
| அச்சுப்பதிப்பு | : சூரியா அச்சகம், வவுனியா. தொ.பே: 077 3785023/ 078 6148885 |
| விலை | : 150/- |

| | |
|---|---|
| Title | : Kirukkalkal Siththiramakinrana |
| Author | : F.Amalraj |
| First Edition | : 2011 January |
| Pages | : 16 + 76 = 102 |
| Copy Right | : Author |
| Front Page | : R.Sutharsan |
| Printers | : Soorya Printing Work, Vavuniya. T.P: 077 3785023/078 6148885 |
| Price | : Rs. 150/- |


## நூலாசிரியருடனான தொடர்புகளுக்கு


இல.66,
பெரியகமம்,
மன்னார்.

No.66,
Periyakamam,
Mannar.

**T.P**: 023 2251364 / 077 3268913

**e-mail** : a_mal22@yahoo.com. **web** : www.rajamal.webs.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை.

கவிஞர் மன்னார்மணி

செந்நெல் நிறைந்திலங்கு
சீர்பெறு நானாட்டான் பிரதேச
மாண்புறு மருதநிலக்கிராமமாம்
வஞ்சியன்குளம் எனும் எனதூரில்
பிறந்துதித்து மிளிர்ந்தோங்கும்
பிரான்சிஸ் அமல்றாஜ் கவிஞனின்
கிறுக்கல்கள் சித்திரமாகின்றன
கவிதைகளைச் சீரணித்து
கனன்றெழும் உணர்வுகளால்
வாழ்த்துரைத்து மகிழ்வுறுகின்றேன்.
உடலை வருத்தி உவகை தந்தவள்
உருவம் மறைத்து உயிர் கொடுத்தவள்
என்ன கொடுத்தால் அம்மா
என் கடன் தீரும் என வினவுவது
தாயின் பெருமையை சாற்றி
நெஞ்சைத் தொட்டுச்செல்கிறது.

நட்பைக்கொண்டு நீ வந்தாய்
காதலைக்கொண்டு நான் வந்தேன்
இறுதியில் நீ தோற்றாய்
நான் வென்றேன் எனவாக
காதலின் சக்தியை எடுத்தியம்பும்
இளங்கவிஞன் அமல்றாஜ்
காதல் கவிதைகளை மட்டுமல்ல
சமுதாயச் சீர்கேடுகளையும்
போரின் கொடுமுடியான
மானுட துன்பியல் அவலங்களையும்
படிப்பவர் கண்களில் நீர்சுரக்க
வடித்தெடுத்த விதம் பாராட்டுக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்தாலும் காவாலி என்பீர்கள்
இப்படித்தாமதித்தாலும்
காலாவதி என்கிறீர்கள்
இதயத்தைப்பிழிந்தெடுக்கும்
கவிவரிகள் மூலம் முதிர் கன்னி
அவலங்களைத் தெளிவுற உணர்த்துகின்றார்.
யுத்தத்தின் கோரப்பிடியால்
இரு கால்களையும் இழந்தவரின்
வேதனைகளையும் விசும்பல்களையும்
சகலதையும் இழந்த பெண்ணின்
அவலங்களையும் சிறுகதை போல்
கவிமொழியில் எடுத்தியம்பும் விதம்
விதந்துரைக்கப்பட வேண்டியது.
இருப்பினும் இழப்பும் களைப்பும்
எமக்கு ஒன்றும் வேதனையல்ல
ஏனெனில் தீயில் கூட
நடந்து பழகியவர்கள் நாங்கள்
என கவிஞர் நம்பிக்கை ஊட்டுகிறார்.

பண்பாட்டுச் சீர்கேடு பற்றி கவிதையில்
பாவம் வெளியில் தெரிபவை
அவள் அங்கங்கள் மட்டுமல்ல
வெளுறிப்போன நம் கலாச்சாரமும்தான்
கவிவரிகள் மூலம் இவ் இளங்கவிஞன்
துயருறுவது எனக்கும் துயரைத்தருகிறது.
பிறந்தகம் பற்றி மண்வாசனை வரிகள்
எனக்கும் அந்த மண்வாசனையைத்தருகிறது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்
கிளிநொச்சி ஆதியாம் மாவட்டங்களின்
உலகார்ந்த செஞ்சிலுவைச் சங்கத்தின்
பொருளாதார பாதுகாப்புத்துறை
குழுமத்தலைவராகப் பணியாற்றுவதோடு
வணிக முகாமைத்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்பினையும் மேற்கொண்டுவரும்
இவ் இளம் கவிஞன் அமல்றாஜ்
இவ்வாறான மேலும் பல ஆக்கத்திறன்
படைப்புக்களை வெளியிட்டு
தமிழ் அன்னைக்கு புகழ் சேர்க்க வேண்டுமென
இதயம் மலர்ந்து மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு. அலஸ் மரியதாஸ்**
**(கவிஞர் மன்னார்மணி)**
முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - மாந்தை மேற்கு, மடு.
விசேட ஆணையாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை.
நிருவாக அலுவலர், பிரதேச செயலகம், மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**வானொலி அறிவிப்பாளர் A.R.V. லோஷன்**

ஆர்வமுள்ள, தேடல் நிறைந்த ஒரு இளைஞராக அமல்ராஜை கிட்டத்தட்ட முகமறியாமல் ஒரு தசாப்த காலமாக அறிந்துள்ளேன்.

மன்னார் என்ற கலைத் தாகமும், கலையம்சமும் நிறைந்த பிரதேசத்தில் இருந்து மற்றுமொரு திறமையான சகலதுறையாளன் படைப்பாளியாகப் புறப்பட்டுள்ளது மகிழ்ச்சி தருகிறது.

சிறுவயது முதலே ஒரு வானொலி நேயராகக் கவிதைகள் படைக்கும் ஆற்றல் உள்ளவராக நான் முதலில் அறிந்த அமல்ராஜ் ஒரு சமூக அக்கறைகொண்ட சிந்தனையாளராக,தலைமைத்துவப் பண்புடைய ஒருவராக வளர்ந்துகொண்டு வருவது மகிழ்வாக இருக்கிறது.

காதலையும்,கிளர்வையும்,இளம் பெண்களையும் மட்டுமே கவிப் பொருள்களாகக் கொள்ளும் எம் இளைஞர்கள் மத்தியில் ஒரு வித்தியாசமான கவிஞனாக அமல்ராஜைக் காண்கிறேன்.

சமூகத்தின் நிகழ்வுகளை தன் அக்கறையுள்ள சமூகப் பார்வையினால் நோக்கி ஆதங்கப்படுகிறார். ஆத்திரப்படுகிறார்.

தாய்மை பற்றி உருகும் கவிஞர்,யுத்தம் பற்றிக் கவலைப்படுகிறார். முள்ளி வாய்க்கால் முடிவுரையை வாழ்க்கையை முழுதும் தொலைத்த ஒரு பெண்ணை முன்னிறுத்தி எம்மையும் சோகத்தில் ஆழ்த்துகிறார்.
சில காதல் கவிதைகளிலும் அவரின் கவித்திறமை,காதல் உள்ளம் புரிகிறது.

கவியுலகில் தன் தடத்தை அழுத்தமாக ஆரம்பித்திருக்கும் அமல்ராஜுக்கு வளமான வாழ்த்துக்கள். மேலும் பல நல்ல படைப்புக்களை எமக்கு வழங்கட்டும்.

**A.R.V. லோஷன்**
நிகழ்ச்சிப் பணிப்பாளர் - வெற்றி FM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிமாமணி அகளங்கன்.

கவிதையைக் கலைகளின் அரசி என்பர் அறிஞர். ஒரு நல்ல கவிதை எப்படி இருக்கவேண்டும் என்பதை கவிப்பேரரசு வைரமுத்து அழகாகச் சொல்கிறார். 'எளிமையில் மகாத்மாகாந்தியைப்போலவும், பொருளிலும் கற்பனையிலும் எலிசபெத் மகாராணியைப்போலவும் இருக்கவேண்டும்'. 'சான்றோர் கவி'க்குக் கம்பன் கொடுத்த விளக்கம் 'புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து ... எனத்தொடங்கி சவியுறத் தெளிந்து தண்ணெண் றொழுக்கமும் தழுவி...' இருக்க வேண்டும் என்பதாக அமைகிறது.

இன்றைய பதுக்கவிதை உலகிலும் இந்தக் கோட்பாடுகள் செல்வாக்குச்செலுத்துவதை யாராலும் மறுக்க முடியாது.
'பொருளின் ஆழம், கற்பனை அகலம், கவித்துவக்கூர்மை! நல்ல கவிதைகளுக்கு இவை இலட்சணங்கள்.

கவிதைக்குரிய அழகு தனித்துவமானது. அத்தோடு பாடுபொருளை அதற்குரிய உணர்வோடு வெளிப்படுத்துவது கவிஞனின் தரத்தைக்காட்டும். 'காதல் வந்தால் கழுதையும் கவிதை பாடும்' என்பது வேடிக்கையான கூற்றல்ல. உணர்வின் வெளிப்பாடே கவிதை என்பதால் இதனை ஏற்றுக்கொள்ளல் தவறாகாது.

இன்று ஈழத்தில் வரும் இலக்கியப்படைப்புக்களில் கவிதை நூல்களே அதிகம் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. புதுக்கவிதைத் தொகுப்புக்களே அதிகம் வெளிவருகின்றன. அதில் காதல் கவிதைகளே அதிகம் காணப்படுகின்றன. அதற்குக்காரணம் இளைஞர்களே அதிகமாக இத்துறைசார் நூல்களை எழுதி வெளியிடுவதே.

சில புதுக்கவிதைத் தொகுப்புக்கள் வெறும் 'நாட்குறிப்புப்புத்தகம்' போல அல்லது காதலிக்கு அனுப்பவேண்டிய காதலனின் கடிதம் போல இருக்கின்றன. சில தொகுப்புக்கள் காதலையும் சமூகத்தையும், சம காலத்தையும் பாடுவனவாக அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் பி.அமல்றாஜ் இன் 'கிறுக்கல்கள் சித்திரமாகின்றன' என்னும் இக் கவிதைத்தொகுப்பு காதலோடு சமகாலம், சமூகப் பிரச்சனை என்பனவற்றையும் கலந்ததாக அமைந்துள்ளதைப் பாராட்டலாம்.

மன்னார் இப்பொழுது தமிழ் உணர்ச்சியோடு கூடிய கலை இலக்கிய எழுச்சிப்பாதையில் வீரநடை போடத் தொடங்கியிருக்கிறது. நான்கு நாட்கள் நடைபெற்ற செம்மொழி மாநாடு அதன் வெளிப்பாடு. போராட்டப் புழுதியிலே மறைக்கப்பட்டுக்கிடந்த மன்னார் மாவட்டம் புழுதி துடைத்துச் சிலிர்த்தெழுந்துள்ளது.

எஸ்.ஏ.உதயனின் லோமியா, தெம்மாடுகள் ஆகிய இரு நாவல்கள் வட மாகாண இலக்கிய நூற் பரிசை தொடர்ச்சியாக (2008, 2009) வென்றுள்ளன. தமிழ் நேசன் அடிகளாரின் நெருடல்கள் மன்னார் அமுதன், சிவகரன் முதலானோரின் கவிதைத்தொகுப்புக்கள் மற்றும் சில கவிதைத்தொகுப்புக்கள் மன்னாரின் இலக்கிய வறட்சிப்போக்கச்செய்த மழைத்துளிகளாக இனங்காணப்படுகின்றன. செம்மொழி மாநாடு பெருமழை.

மன்னார், நானாட்டான், வஞ்சியன்குளம் இளங்கவிஞர் அமல்றாஜ் திருமறைக்கலாமன்ற மன்னார் கிளையின் செயலாளராகப் (2002-2007) பணியாற்றியவர். தாளம் பத்திரிகையின் முதல் ஆசிரியராகப் பணியாற்றியவர். மன்னார் புனித சவேரியார் கல்லூரியின் பழைய மாணவரான இவரின் 'உயிர்க்கத்துடிக்கும் உதிரங்கள்' என்ற 45 நிமிட ஊமை நாடகம் பலரது பாராட்டையும் பெற்றது. (ICRC) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் வவுனியாவில் பணியாற்றும் அமல்றாஜ் இன் முதல் கவிதைத்தொகுப்பு இது.

இந்நூலிலுள்ள 18 தலைப்புக்களிலான கவிதைகளில் நீதான் அவள், நீ-நட்பு-காதல், கல்லறைக்கனவு, ஒரு ரயில் பயணம், ஒரு காதல் காவியம், அடங்காத காதல், மொட்டைமாடிக் காதலும் முடிந்துபோன கற்பனையும், கடற்கரைக் காதல் ஆகிய எட்டுக் கவிதைகள் காதல் சம்மந்தமானவை. இவற்றில் கடற்கரைக்காதல் இசைப்பாடலாக அமைந்துள்ளது.

'தியாகம் அவள் பெயர்' தாய்மைச் சிறப்புப்பாடல். 'எனது ஆட்டோக்கிராப்', 'ஊர்ப்பக்கம்' ஆகியவை இரண்டும் பழைய நினைவுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரை மீட்டல்கள். 'முள்ளிவாய்க்கால் முடிவுரை', 'செத்தா போய்விட்டேன்', 'பயணங்கள் முடிவதில்லை', 'தமிழ் சுதந்திரம்' ஆகிய கவிதைகள் போர் அவலங்களைப் பற்றியவை.

'முதிர் கன்னி', 'கொன்று விடுங்கள்', 'புதுமைப் பெண்ணும் தோற்றுப்போன ஆணும்' ஆகியவை சமூக அவலங்கள் பற்றிய புதிய சிந்தனைகள்.

அமல்றாஜ் பெருங் கவிஞனாக உருவாக தகுதி படைத்தவர் என்பதை அவரது சில கவி வரிகள் காட்டுகின்றன. ஒன்று அவர் பழைமையைப் புதிய வடிவில் வழங்கும் விதம்.

'தியாகம் அவள் பெயர்' என்ற கவிதையில் தாயைப்பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கோவில் எனக்கு
மறந்தே போனது.
சாமி இங்கு
வீட்டிலிருக்க
கோவிலில் எதற்கு
கோபுரக் கலசம்?

'தாயிருக்கும் காரணத்தால் கோவிலுக்குப் போனதில்லை' என்ற வாலியின் திரையிசைப்பாடல் வரியை இது மெருகு படுத்தியிருக்கிறது.

உண்மையாகவே நீ கடவுளம்மா என்ற வரிகள் கடவுள் தன் வடிவாய் தாயைப்படைத்தான் என்பதை வலியுறுத்துகின்றது. இக்கவிதையில் நீயோ/அடுப்பங்கரையில் தானே/இன்னும் இருக்கிறாய்/அரை(றை)வாசியாய் என அரை, அறை, சொற்சிலம்பமும் ஆடுகிறார் கவிஞர்.

'ஒரு காதல் காவியம்' என்ற கவிதையில் இவரது கற்பனை அற்புதமாக அமைந்திருக்கிறது.

சோம்பல் முறிக்கும் மாலைப் பொழுது
தங்கச் சூரியனும் தாண்டமுடியாக்கடலும்
கொஞ்சம் கூட வெட்கமின்றி
ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி
முத்தமிட்டுக்கொள்ளும் நேரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப்பொழுதை தன் காதல் உணர்வோடு கூடிய கற்பனையோடு இவர் பாடும் விதம் இவரை எதிர்கால நட்சத்திரமாக இனம் காட்டுகிறது.

வானமெங்கும் தங்க விண்மீன்கள்
விழியிமை மூட
சூரியன் வந்து கடல் குளித்தேறும்
நேரம்.

என்று காலைப்பொழுதை வைரமுத்து வர்ணித்ததை அமல்ராஜ் இன் கற்பனையோடு ஒப்பிட்டு பெருமிதங்கொள்ளலாம்.

'புதுமைப்பெண்ணும் தோற்றுப்போன ஆணும்' என்ற கவிதையில் முடிவுரையாக

குட்டைப்பாவாடையில்
குதூகலமாய்ப் போகிறாள்
அவள்.
கணவன் மட்டும்
முக்காட்டோடு முனங்கிக்கொண்டிருக்கிறான்
வெளியே வர முடியாமல்.

என்கிறார் கவிஞர். இது திருக்குறள் ஒன்றை எனக்கு நினைவூட்டுகிறது.

புகழ்புரிந்த இல்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை.

இவரது காதல் சார்ந்த பாடல்கள் இவரது வயதுக்கும் உணர்வுக்கும் ஏற்ற வடிகாலாக அமைகின்ற அதேவேளை சமூகம் சார்ந்த பாடல்கள் மிகவும் காத்திரமானவையாக அமைந்துள்ளன. அரசியல் அல்லது போராட்ட அவலங்கள் என்ற வகையில் 'செத்தா போய்விட்டேன்' என்ற கவிதை போரின் கொடுமையை எடுத்துக்காட்டுகிறது.

போரின் இலக்கணம்
என்னில் தெரியும்
போரின் இலக்கியம்
என்
வரலாற்றால் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என போரின் கொடுமையால் இரண்டு கால்களையும் இழந்த ஒரு தமிழ் இளைஞனின் ஆதங்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது சிறப்பாக அமைந்துள்ளது.

'முள்ளிவாய்க்கால் முடிவுரை' ஆவணப்படுத்தப்பட்ட அவலமாக கவிதையிலே வெளிவந்திருக்கிறது. சோக உணர்வையும், யுத்தக் கொடுமையையும் உள்ளத்தில் ஆழப்படுத்தி உதிரத்தோடு கலக்கச்செய்துள்ளது.

'பயணங்கள் முடிவதில்லை' என்ற கவிதை போராட்டத்தில் நாம் கொடுமைப்படுத்தப்பட்ட விதம் பற்றிப்பேசுகிறது. அதேவேளை உற்சாகமூட்டுகிறது.

'எனது ஆட்டோகிராஃ', 'ஊர்ப்பக்கம்' ஆகிய இரு கவிதைகளும் ஒரேவிதமானவை. 'ஆட்டோக்கிராஃ' படப்பாடலின் ஓசையோடு பொருந்தியவை. மன்னார் கிராமிய மணம் வீசும் பாடல்கள். நினைவலைகளின் சுகந்தம் நெஞ்சில் இனிக்கிறது.

அமல்றாஜ் எதுகை மோனை, இயைபு பொருந்திய ஓசை ஒழுங்கோடு இக்கவிதைகளை எழுதியுள்ளார். இவரது சமூகப்பார்வையும் வெளிப்படுத்தும் திறனும் பாராட்டுக்குரியன. பாடுபொருளுக்குரிய உணர்வு வெளிப்பாடு சிறப்பாக அமைந்துள்ளது. சொல்லாட்சி கற்பனை, சொல்லும் விதம், நடை என்பன இவரை எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக எதிர்பார்க்க வைக்கிறது.

காதலைக்குறைத்து, சமூகத்தை அதிகம் அவதானித்து இன்னும் பல கவிதைகளை இவர் படைத்து மன்னார் மண்ணுக்கும் தமிழன்னைக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**அகளங்கன்.**
03.11.2010

90. திருநாவற்குளம்.
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிதை என்பது கற்பனையின் வடிகால் மட்டுமல்ல காலத்தின் கண்ணியப்போக்குமாகும். உலகிலுள்ள பல ஏனைய மொழிகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது தமிழில், கவிதை என்கின்ற மொழி வடிவத்திற்கு பெரிதும் அறிமுகம் தேவையில்லை. காரணம் தமிழின் ஆரம்பகாலம் தொடக்கமே இந்த கவி வடிவங்கள் மொழியில் இருந்துகொண்டே வந்திருக்கிறது. இதற்கு நானும் விதிவிலக்கல்ல. மொழியை தாய்க்கு சமமாக யோசிக்கத்தொடங்கிய காலத்திலிருந்தே இந்தக் கவிதை என்கின்ற மொழிசார் கலைவடிவத்தில் எனக்கும் ஈடுபாடு மிக அதிகம். கவிதையை ஆரம்பகாலம் தொடக்கம் ஒரு தனித்துவமிக்க ஒரு தமிழ் புலமையாகவே ஊகித்து பார்த்துப்பழகியவன். கம்பன் தொடங்கி மகாகவி, பாரதிதாசன் கடந்து மேத்தா, அப்துல் ரகுமான், வாலி, வைரமுத்து என பல கவித்துவ மேதாவிகளை வாசித்து வாழ்ந்திருக்கிறேன்.

எனது தாயிடமிருந்து எனக்குக் கடத்தப்பட்ட இந்த கலைத்தாகம் அவளின் அயராத ஆதங்கத்தினாலேயே என்னை பல மேடைகள் வரை கொண்டுவந்து நிறுத்தியது. 14 வயதில் நான் எழுதிய முதல் கவிதையைப் பார்த்தபொழுது எனக்குள்ளே இருந்த மகிழ்ச்சி காதலி கொடுத்த முதல் முத்தம் போல இன்னும் என்னுடைய இதயத்தில் சிலிர்த்துக்கொண்டேயிருக்கிறது. அன்று தொடங்கிய எனது கிறுக்கல்கள் இன்னும் தொடர்ந்துகொண்டே போவது ஆரோக்கியமானதாக இருக்கின்ற அதேவேளை எனது எழுத்து தொடர்பாக எனக்குள்ள சமூகப் பொறுப்பையும் அதிகப்படுத்தியிருப்பதை நன்றாகவே உணர்கின்றேன். கவிதை எழுத தொடங்கியவனுக்கு அதை புத்தகமாக வெளியிடவேண்டும் என்கின்ற ஆசை திருமணமான பெண்ணுக்கு இருக்கின்ற குழந்தைப்பேற்று ஆசை போன்றது. எனது இந்த குழந்தையை பிரசவிக்க எனக்கு எடுத்த காலம் 12 வருடங்கள். காரணங்களும் இல்லாமலில்லை, நான் இன்னும் சிறுவன் என்கின்ற அசாதாரண பிரமை, எனது கிறுக்கல்களை எனது சமூகம் எப்படிப் பார்க்கப்போகிறது என்கின்ற பய மேலோங்கல், எனது எழுத்தை யார் வாசிப்பார் என்கின்ற அநாகரீக அவையடக்க ஆதங்கம், பொருளாதார வரையறை மற்றும் கல்வி, வேலை போன்ற எனது ஏனைய முன்னுரிமைகள். இருந்தும் எனது கிறுக்கல்களை எனது மேசை லாச்சியும், கிழிந்து போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைநிற மட்டைக்கோவையும், எனது கணினியின் பிரதான சேமிப்புப்பகுதியும் இற்றைவரை தாங்கியே வந்திருக்கிறது.

இவற்றைத்தாண்டியும் எனது ஆதங்கங்களை மீறி எனது கிறுக்கல்களை தமிழ் உறவுகளின் கைகள் வரை கொண்டுசென்ற பெருமை நிச்சயமாக ஒரு சில நல்ல மனிதரையே சாரும். முதலாவதாக என்னிடமுள்ள கலைத்தாகத்தை முதலில் இனங்கண்டு இந்த கவிதை நூல் வெளியீடு வரை கொண்டுவந்து சேர்த்த தங்கக் குரலோன் திரு. பாலச்சந்திரன் அவர்கள். மற்றும் எழுத்தாளர் சிவகரன் அவர்கள். இவர்கள் என்மேலும் எனது எழுத்தின் மேலும் வைத்த நம்பிக்கையை இந்த எனது முதலாவது நூல் வழிமொழியும் என நம்புகிறேன். அதேபோல தங்கள் வரிகளினால் என்னை ஊக்கப்படுத்தி இந்நூலுக்கு செய்திகளை தந்த அனைவரையும் மற்றும் இந்நூலின் பிரசவ வலியை என்கூடவே சேர்ந்து சுமந்த எனது குடும்பத்தாரையும் நன்றியோடே நினைக்கிறேன்.

கவிதையை நான் அதிகம் நேசிப்பவன். அவற்றை அதிகம் வாசிப்பவனும் கூட. கவிதை எழுதுவது சுலபம். ஆனாலும் அதை நல்ல கவிதைக்குரிய இயல்புகளுடன் காலத்திற்கு ஏற்றாற்போல் உருவாக்குவதிலும்தான் ஒரு க்விஞனின் வெற்றி தங்கியிருக்கிறது. அந்தவகையிலே, நானும் ஒரு நல்ல சமூகக் கவிஞனாக வெற்றிபெற வேண்டுமென்பதே எனது ஆவல். வாசித்தலும், யதார்த்தச் சிந்தனைப்போக்கும் தரமான கவிதைகளை உருவாக்க ஊன்றுகோல்களாக அமையவல்லன.

எனது கிறுகல்களை வாசித்தறிவதற்கு முன் இவ்விடத்தில் உங்களை அதிக நேரம் நிறுத்தி வைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஒவ்வொரு வரிகளையும் வாசியுங்கள். பிடித்திருந்தால் விமர்சியுங்கள். பிடிக்காவிட்டாலும் விமர்சியுங்கள். அதற்காக நான் காத்திருக்கிறேன். உங்கள் வார்த்தைகள் என்னை இன்னும் இன்னும் உற்சாகப்படுத்தட்டும். புடமிடட்டும். எனது எழுத்தின் எதிர்காலம் உங்களாலேயே தீர்மானிக்கப்படட்டும்.

நன்றி. வாழ்த்துக்கள்.

அன்புடன்
பி.அமல்றாஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே ....

01. தியாகம் அவள் பெயர் — 01

02. நீதான் அவள் — 06

03. நீ - நட்பு - காதல் — 09

04. முதிர்கன்னி — 12

05. செத்தா போய்விட்டேன் — 18

06. கல்லறைக் கனவு — 25

07. எனது ஆட்டோகிராப்ஃ — 28

08. ஒரு ரயில் பயணம் — 34

09. முள்ளிவாய்க்கால் முடிவுரை — 40

10. தமிழ் சுதந்திரம் — 45

11. ஊர்ப்பக்கம் — 47

12. பயணங்கள் முடிவதில்லை — 52

13. ஒரு காதல் காவியம் — 58

14. அடங்காத காதல் — 63

15. கொன்றுவிடுங்கள் — 65

16. மொட்டைமாடிக் காதலும் முடிந்துபோன கற்பனையும் — 68

17. கடற்கரைக்காதல் — 72

18. புதுமைப்பெண்ணும் தோற்றுப்போன ஆணும் — 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகம் அவள் பெயர்

கையில் பானை,
வாயில் தாலாட்டு,
மனதில் பாசம்,
விரல்களில் காயம்,
கணவனிடம் கண்ணியம்,
பிள்ளையிடம் இரக்கம்,
பிள்ளை அழுகைக்கும்
பிட்டுப்பானை கூக்குரலுக்கும்
இடையில் கேட்கும்
கல்யாணி ராகம்
அவள் குரல்..

எத்தனை முகங்கள்
அவளுக்கு?

மா ஆட்டும் - அவள்
கைகளுக்கும்,
பாலூட்டும் - அவள்
மடிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டும் - அவள்
உதடுகளுக்கும்
என்னா பெருமதி..??

கொடுத்து வைத்தவன்
நான்.
இருபத்து நான்கு மணிநேர
தெய்வ தரிசனம்
எனது வீட்டில்.
பகலில் தெய்வம்
சமையலறையில்
இரவில் தெய்வம்
படுக்கையறையில்..

கோவில் எனக்கு
மறந்தே போனது
சாமி இங்கு
வீட்டிலிருக்க
கோவிலில் எதற்கு
கோபுரக்கலசம் ??

உடலை வருத்தி
உவகை தந்தவள்,
உருவம் மறைத்து
உயிரைக்கொடுத்தவள்
என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால் அம்மா
என் கடன் தீரும்?

என்னிடமிருப்பதோ
நீ தந்த ரத்தம்
நீ தந்த தேகம்
நீ கொடுத்த சுவாசம்..
உதிரம் கொடுத்த
உத்தமி நீ.
என்
உருவம் தந்தாய்
உண்மையாகவே — நீ
கடவுளம்மா.

அப்பாக்கு தாரம்,
பின்னர்
நான் உனக்கு
பாரம்,
வளர்த்தெடுப்பதில்
எத்தனை கஸ்டம்
இருந்தும் - நீ
வளர்த்தாயம்மா
எனக்கு — நீ
எத்தனை அதிஸ்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
வாய் பார்த்து
பேசிப்பார்த்தேன்,
பேச்சு வந்தது.
முகம் பார்த்து
புன்னகைத்தேன்,
பூ மலர்ந்தது.
உன்னை
உரசி உரசிப் பார்த்ததில்தான்
எனக்கு
உணர்வே வந்தது.
நீ
நடக்கச்சொன்னாய்
நகர்ந்தேன்.
தூபமிட்டாய்
எரிந்தேன்.
வளர்க்கத்துடித்தாய்
நானோ
விருட்சமானேன்.
ஆனால் - நீயோ
அடுப்பங்கரையில்தானே
இன்னும் இருக்கிறாய்
அரை(ற)வாசியாய்.

ஊர் உறங்கியும்
உறங்காத
உன் தாலாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் - என்
காதுகளில்
கேட்கும்
ரகுமானின் 'ஜெய் கோ" தான்...

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதான் அவள்.

அசைந்து போனதால்
அலையுது மனசு
நின்று பார்த்தால்
நிறையுது வயசு.
விலகப்பார்த்தால்
உலகை யுத்தம் - நீ
நிலவாய் வந்தாய்
மயக்குது நித்தம்.
நடைக்கும்
இடைக்கும்
உனக்கும் ரொக்கம்
தந்தாலும் மனசில்
நீதாண்டி சொர்க்கம்.

எதற்காக வந்தேன்
நீ வேண்டும் என்றேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கா நான் பிறந்தேன்
இதுவரை நான் வளர்ந்தேன்?

என்
இளமையின் தாகம்
உன்னுடைய தேகம்
தீருமா என் சோகம்
இதுவா காதல் வேகம்?

நீ
சிரிப்பாய் சுகமாய்
மரிக்கும் இதயம்
நான்
சிரிக்க நினைத்தால்
எரியும் இமயம்.

உன்
கன்னத்தின் குழிக்குள்
என்னிருவிழிகள்
எப்படி வைத்தேன்
என்
உயிரையும் தைத்தேன்.

என்னை எங்கு
பிடித்துவைத்தாய்?
ஏனடி நெஞ்சை
மடித்துத்தைத்தாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினுள் உன்னை
உறங்கவைத்தேன்
என்
உதிரத்தினுள் உன்னை
ஊற்றியே பார்த்தேன்.

என்
இதயம் இப்போ
இங்கு இல்லை.
அது
திரும்பும் வரையில்
உறக்கம் தொல்லை.
இனி
நீயே எனது
வாழ்வின் சித்தம்
இதற்கே என்னுள்
நித்தம் யுத்தம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ - நட்பு - காதல்

காதலும் நட்பும்
வேறு வேறு
என்ற
விதண்டாவாதம்.

வெறுத்துப்போய்
அருவருப்பாய்
காதலை வெறுத்த நேரம்.

காதலையும்
நட்பையும்
முடிச்சிட நினைத்த
அவளுக்கு
நான் கொடுத்த
விளக்கம்.
நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு உன்னைக்கொடுக்கும்
காதல்
எனக்கு உன்னையேகொடுக்கும்.

இருந்தும்
நட்பைக்கொண்டு
நீவந்தாய்,
காதலைக்கொண்டு
நான் வந்தேன்.
இறுதியில்
நீ தோற்றாய்
நான் வென்றேன்.

முதல்
நட்பென்றேன்
பார்த்தபோது,
பின்னரும்
நட்பென்றேன் - நீ
பழகியபோது,
இப்போ அதை
காதல் என்கிறேன்
நீ
பிரியும்போது.

புன்னகை கொடுத்து
என்னை வாங்கினாய்,
நானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத்தொலைத்து
உன்னில் விழுந்தேன்
எழுந்துபார்க்கவும்
இஷ்டமில்லை,
தொலைந்துபோகவும்
நாதியில்லை.

விழுந்தேகிடக்கிறேன்
என்னை
தூக்கியெடு - இல்லை
தூக்கிலிடு.

நட்போடு
வந்தகாதல்,
இது
எதையும் வெல்லும்.
விட்டுப்போனால்
நம்மையும் கொல்லும்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்கன்னி

என்னையும்
கவனியுங்கள்.

மச்சத்துப்பெண்கள்
கொத்திக்குலாவும்
முற்றத்தின் மூலையில்
மூச்சுமின்றி பேச்சுமின்றி
முக்காட்டோடே
முப்பதுவருடங்கள்...

மூடி முனங்கும்
என்னையும் பாருங்கள்.

என்
கண்ணீரின் கதைக்குள்
காமடி தெரிகிறதா
உங்களுக்கு..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னில் - இந்த
இசைகளுக்குக்கூட
இரசனையில்லை.
அப்படியிருக்க
இவர்களுக்குமட்டும்
எப்படி வரும்
இந்த
அலரிப்பூவில் ஆசை??

பெண்ணாய் பிறந்ததன்
பாரம் புரிகிறது.
பெற்றோரின் கண்ணில்
அதன்
பெறுமானம் தெரிகிறது.

மஞ்சளுக்கும் மாலைக்கும்
இல்லையா நெஞ்சம்?
என்
மஞ்சத்திற்கும் மணவறைக்கும்
ஏனிந்தப்பஞ்சம்?

எனக்குமட்டும்
தோளை எட்ட
மாலையில்லை.
எனக்காக
மேடைவந்து
மேளம்கொட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
மனிதரில்லை.

வயதிற்கு வந்தது
இவள் செய்த குற்றமா?
என்
மனதிற்குள் வரைவது
எமன்வீட்டுச்சட்டமா?

'முதிர்கன்னி' என்று
முதுமானி கொடுக்கிறீர்கள்..
யாராவது — என்
முந்தானைக்கு
முடிச்சிட நினைத்தீர்களா?

இது
அலரிப்பூவும்
அந்தஸ்து கேட்கும் காலம்.
அப்படியிருக்க
இந்த
அல்லிப்பூ மட்டும்
ஏன் இன்னும்
சாகாமலும்
சமையாமலும்
விலைபோகாமல் கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலில்லை — எங்களிடம்
ஆனால்
கைகளிருக்கு!
பணமில்லை.
உண்மைதான்
மனமிருக்கு — நல்ல
குணமிருக்கு!!

இங்கு சிலர்
என்னைப்பார்த்து
காலாவதியாய்ப்போன
கத்தரிக்காய் என்கிறார்கள்.
அழுதுகொள்கிறேன்
உண்மைதான்!
ஆனால்
அழுகிவிடவில்லையே!!

ஏன் என்னை
முறைக்கிறீர்கள்?
முறைகெட்டா போய்விட்டேன்?
என்
மணவறைக்கு
தகுதிபெற்றவை
வயது மட்டும்தானே!
வசதி??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்தாலும்
காவாலி என்பீர்கள்.
இப்படி
தாமதித்தாலும்
காலாவதி என்கிறீர்கள்..

உணர்வுகளுக்குள்
முட்டிமோதும்
மரண அவஸ்தை
புரியுமா இவர்களுக்கு??

கல்யாணம் என்பதைவிட
ஏன் - ஒரு
கடமைகூட செய்யவில்லை
எனக்கு...

எனக்கென்று ஒருவன்
எங்கிருப்பான்?
உனக்குத்தான் நானென்று
எவன் வருவான்?

தோப்போரக்குடிசையில்
தாரத்தோடு
தாலாட்டுப்பாடும்
தாம்பத்தியம் கேட்கிறது.
நானோ இங்கு
முகாரி இராகத்தில்
முனங்கிக்கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னந்தனியே
தாம்பத்தியம் நடாத்தும்
தந்திரவித்தையை
என்னிடம் கேளுங்கள்
எதுகைமோனையில் சொல்லுவேன்..

வருடங்கள் போனாலும்
வருடல்களுக்குக்கூட
வாய் திறக்கமுடியாமல் போன
மரக்கட்டை நான்.

நான் வளர்த்த உடம்பும்
உப்பிட்ட உணர்வுகளும்
கண்ணியம் தவறாமல்
கடைசிவரை காப்பாற்றிய
காவியக்கற்பும்
கடைசியில் என்னை
ஏமாற்றிப்போனதா?
யாராவது — நான்
உதிர்ந்து போவதற்குள்
முகர்ந்துவிடுங்கள்.
பிந்திவிட்டால் - நான்
முந்திவிடுவேன்
முடிந்துபோவதற்கு..

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்தா போய்விட்டேன்?

(இது ஒரு மனக்குமுறல். யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு இரு கால்களையும் இழந்த ஒரு தமிழ் இளைஞனின் ஆதங்கங்கள் கவிதையாக புனையப்படுகிறது.)

ஒட்டி உரசி
கூட்டிக்கேட்கும்
வானொலிகளின்
ஒலிபரப்புக்களுக்குள்,
மௌனமாய் கேட்கும்
என்
முனங்கல் பற்றி
அங்கிகாரம் கேட்கவில்லை.
இருந்தாலும்,
மின்வெட்டு
வந்தபின்னாவது
என்
அனுங்கலுக்கு மெல்ல
உங்கள்
காதுகளைத்திருகுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயமாய் கடத்தும்
அண்டவெளியில் - எனது
ஒலிபரப்பு மட்டும்
ஏன் இன்னும்
ஒலிக்கவேயில்லை.

மூடிக்கொண்டேயிருக்கிறேன்.
பரவாயில்லை.
ஆனால் - மறக்காதீர்கள்
ஒன்றைமட்டும்,
நான் இன்னும்
மரிக்கவேயில்லை.

இறந்துகொண்டிருக்கிறேன்
உண்மைதான்.
விடியும் பொழுதில்
என்
மடியும் இரவுகள் - நானும்
ஓர்
மனிதன் என்று
நியாய தீர்ப்பிற்காய்
நிதர்சனமாகிறது!

என்
விழிகள் உறங்கினும்
விதிமட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும்
விழித்துக்கொண்டுதான்.

ஓர்
அந்திப்பொழுதின்
முந்திப்பார்க்கும்
பிந்திய பகல்களுக்குள்
சிக்கிக்கேட்கும்
யுத்தவிமானங்களின்
குண்டு மழையில்
நனைந்து கரைந்த
வலது கையும்.

வெட்ட வெளியில்
விட்டு வந்த
வீட்டுப்பொருட்களை
மீட்கப்போய்,
நட்டுவைத்த
கண்ணிவெடியில்
காலை வைத்து
மண்ணோடு போன
மற்றொரு காலும்.

என்
உடலின் - ஓர்
உறுப்பென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
மறந்தே போனது
எனக்கு.

ஒன்றைக்காலும்
ஒன்றைக்கையும்
ஒன்றையாய் நிற்க
என்
இதயம் மட்டும்
இரட்டையாய் அடிக்கிறது
இறந்துவிடுவதா
இல்லை — மறந்து
வாழ்ந்து விடுவதா??

மறந்துவிடாதீர்கள்
இன்னும் நான்
மரிக்கவேயில்லை.
ஊனம்
உண்மைதான்.
ஊர்ந்து திரிந்தாலும்
என்னை
ஊர்வன என
ஊகித்துவிடாதீர்கள்.
மனைக்குள்ளே
முடங்கியிருந்தாலும்
இன்னும் - நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன்தான் !
மறந்துவிடாதீர்கள்.

எட்டிப்பாருங்கள்
தினமும்
முட்டி — கதவில்
முடிந்து போகிறேன்.
உங்களை — உதவிக்கு
அழைத்து அழைத்தே
இப்போ
குரல்வளையோடே
நின்றுவிடுகிறது - என்
குரல்.
நீங்கள்
எட்டிப்பிடிக்க
கையும் இல்லைதான்.
பறவாயில்லை.
ஆனாலும் - நீங்கள்
கட்டியணைக்க
உடலிருக்கிறது.

போரின் இலக்கணம்
என்னில் தெரியும்.
போரின் இலக்கியம்
என்
வரலாற்றால் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களில்லை
தெய்வ
வரங்களில்லை.
பந்தமில்லை
ஒட்டிக்கொள்ள
சொந்தமில்லை.
அந்தஸ்தில்லை
போர்
ஊனத்தால் - இங்கு
இந்தத்தொல்லை.
உணவும் உடையும்
தாராளம்.
தயவுசெய்து
உங்கள் மனங்களையும்
தாராளமாக்குங்கள்.

நித்தம் சண்டையில்,
ரத்தம் - எம்
முற்றம் கழுவும்.
ஆஸ்பத்திரி நிறைய
அலுவலகம் வெறிக்கும்.
சத்தம் - பாடை
முத்தம்
எம்
செவிகளைக்கிழிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கே
கைகளும் கால்களும்
தனித்தனியே கிடக்கும்.
இதன் நடுவே
என்னைப்போன்ற
நண்பர் முனங்கல்
புதிய அலைவரிசையில்
அவலமாய் ஒலிபரப்பாகும்.

மறந்துவிடாதீர்கள்.
ஊனம் மட்டும்தான் போறால்.
ஆனால்
உயிருக்கிறது.
அடிக்கொருமுறை
எட்டிப்பாருங்கள்
நான்
செத்துவிடவில்லை.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லறைக்கனவு

என்
இதயம் வருடும்
இதமானவளே,

எல்லாம் அறிந்தும்
ஏன்
காதலை மட்டும்
கடுமையாய் எதிர்க்கிறாய்?

உன்னை
காதலித்த பின்புதானே
இந்த அலரிப்பூவுக்குள்ளும்
அல்லிப்பூ வாசம் வந்தது.

நீ — என்னை
வெறுக்கிறாய்
புரிகிறது! — ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப் பிரித்துப்பார்க்கிறேன்
இதயம்
எரிகிறது..
என்னை
தினம் எரிக்கும்
உன்
உள்ளத்தின் தொல்லை
உனக்கெங்கு புரியும்?
என்னுள் எரிவது
எனக்குத்தானே தெரியும்.

என்
கட்டிலுக்கும்
தலையணைக்கும்
இட்டுவைத்த தவணை
இன்றோடு முடிகிறது.

உன்னால்
கண்ணீருக்கும் கம்மலுக்கும்
குறைவேயில்லை
என்னிடம்.

இந்த
அலைச்சலின் அழகை
புகழாகப் புரிகிறதா
உனக்கு??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால்
துடித்தோடும் - என்
நாடிகளுக்குள்
இரத்தம்
வேலைநிறுத்தம் கேட்கிறது.

உன்போகும்
ஆகாரத்திற்கு – பாதியிலேயே
வயிற்றோட்டம்
நடக்குது.

இறுதிவரை
உன்
இம்சையோடே
இறந்துவிட்டால்
மறந்துவிடாமல்
என்
கல்லறைக்கு வந்துவிடு.
என்
மனதோர சிதைவுகளில்
நீயிட்ட
ரணங்களையெண்ணி
நான்
இறந்தபின்னாவது - நீ
மருந்திடுவதற்காக . . .

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆட்டோகிராப்:

எனது
பழைய நாளேடுகளின்
பழைய பக்கங்கள்...

மழலை...

தட்டுத்தடுமாறி
திக்குத்திணறி
'அ' வராமலும்
'மா' நீளாமலும்
முதல்
முணுமுணுத்த
'அம்மா'.

செல்லமாகவும்
மெல்லமாகவும்
'அப்பா' சொன்னபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குபீரெனச்சிரித்த
குடும்பக்குதூகலம்.
எட்டு வராமல்
எட்டி எட்டி
விழுந்தும் எழுந்தும்
சுற்றிமுடித்த
வீட்டு முற்றம்

யாருக்குமே
தெரியாமல்
மெதுமெதுவாய்
புறக்கியெடுத்து
வாயாரத்தின்று மகிழ்ந்த
கொல்லையோரத்து
மணல்.

நடு இரவிலும்
நடுக்குளிரிலும்
கழுதை பார்க்க
அழுது புரண்ட
மழலைப்பிடிவாதம்,
அந்திசியிலேயே
முதல் தடவையாய்
வேண்டிக்கட்டிய
அம்மாவின்
முதல் அடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராளமாய் கிடைத்த
முத்தங்கள்,
வெறுப்பேற்றிய
மூன்றுநேர ஆகாரம்,
முட்டிச்சிரித்த
மொட்டைத்தலைகள்,
தாலாட்டிற்காகவே தூங்கிய
இராத்தூக்கம்,
சுட்டியென்று — என்னை
குட்டித்தீர்த்த மனிதர்கள்,
ஆகாரத்திற்காய்
ஆவெண்டு
அண்ணாந்து பார்த்து
நிலாக்கிழவி பற்றி
நீண்ட கதைகேட்ட
அந்திப்பொழுதுகள்...

ஓர் ஆட்டோகிராப்ஃ
பக்கம் புரள்கிறது.

பள்ளிப்பருவம்....

முதல் பள்ளி
முதல் ரீச்சர்
முதல் தடி
முதல் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிப்போகும்
ரியூசன்,
விருப்பமின்றியே போகும்
பரீட்சை,
கணக்கில்லாமல்
அடிவாங்கித்தரும்
தவணை ரிப்போட்,
அதற்குள்
தவமிருந்து கிடைப்பதாய்
தவணை லீவு.

வெறுப்பேத்தும்
கணக்கு ரீச்சர்,
கேட்காமலேயே கிடைக்கும்
தமிழ் ரீச்சர் தாலாட்டு,
புரியாமலே தலையாட்டும்
ஆங்கிலப்பாடம்,
புரிந்துகொண்டாலும்
கணக்கேயெடுக்காத
சமய பாடம்.

உயர்தரம் வந்ததும்
உருகிப்படித்த உயிரியல்,

பின்னர்,
போக முடியாமலும் - பிரிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்க முடியாமலும்
போயே தீரவேண்டுமென
விளிம்புகளில் நின்று
விழிகளை நனைத்து
விலகிப்போன
முதல் பிரிவு.

பாடசாலை முடிந்தது
பாடங்கள் முடிந்தன
கொப்பிகளுக்கு லீவு
என் - வெள்ளை
சட்டைகளுக்கும் லீவு.
படித்தவையை எடுத்து
பக்கட்டில் மடித்து
பத்திரமாய் பயந்து
முதல் முறை — என்
பத்திரங்களை தயார்செய்து
பந்தியில் உட்கார்ந்தேன்
அது
வயிற்றுக்கான பந்தியல்ல
வாழ்க்கைக்கான பந்தி
என்
முதல் நேர்முகத்தேர்வு!!

ஏதேதோ கேட்டார்கள்
நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததைச் சொன்னேன்
வேலையைச் சொன்னார்கள்
நானோ
உண்மையைச் சொன்னேன்
'ஐயா, நான் மட்டுமல்ல
என்
அறிவும் குட்டிதான்
நம்பினால் கொடுங்கள்
நம்பாவிட்டாலும் கொடுங்கள்
நம்பவைத்துவிடுகிறேன்
உங்களை"

நம்பிக்கொடுத்தார்கள்.
கொஞ்சம்
நம்பிக்கையும் கொடுத்தார்கள்.

என் ஆட்டோகிராப்ஃ
இன்னும் எழுதப்படுகிறது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ரயில் பயணம்

இரண்டு இருக்கை,
ஒற்றை யன்னல்,
ஒற்றைக்காற்றாடி,
வயதாகிப்போன மின்குமிழ்.

பயணம் ஆரம்பம்
பாதியில் என் மனம்
இம்முறையும்
மீதி இருக்கையில்
ஒரு
மூதாட்டி வேண்டாம்.

ரயிலின்
மழலை நடை,
மனம்குளிர
ஒருபெண்,
அருகில்வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பத்து' என்றாள்.

இல்லை — நான்

'பதினொன்று' என்றேன்

அருகிலேயே அமர்ந்தாள்

காரணம்

அவள் பத்து

நான் பதினொன்று

- இருக்கை இலக்கம்.

ஐந்து முறை

புன்னகைத்தேன்

ஒரேயொரு முறை

அவள் புன்னகைத்தாள்

அவள்

ஆடையைப்போல

புன்னகையும்

சொற்பம்.

அவள் வருகைக்கும்

முதல் வார்த்தைக்கும்

அரைமணிநேர இடைவெளி.

எனக்கோ அது

ஐந்துமணி நேர ஆதங்கம்.

'ஹலோ'

அவள்

முதல் வார்த்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரமாய்
நீட்டிய தொலைபேசியை
மடித்துவிட்டு
இரண்டாவது வார்த்தை,
'கொழும்புக்கு..'

வார்த்தைக்கு இறுதியில்
முற்றுப்புள்ளியும் இல்லை.
கேள்விக்குறியுமில்லை.
எதுவாக இருந்தாலும்
என்னை முந்திக்கொண்டு
எனது வார்த்தை
'ஆம்'.

சிரித்தாள்
உறுதிசெய்துகொண்டேன்
அது
கேள்விக்குறிதான்!!

அவளுடன்
ஒருமுறையேனும்
பேசிவிட ஆசை.

அவள் கையில்
திறந்த புத்தகம்.
என் கையிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்துப்போன
ஆசை ரேகை.

இருவர் அமரும்
ஒற்றை இருக்கை.
இருவருக்கிடையிலுமோ
ஒற்றை கற்பனைச் சுவர்.
எனது ஆசைக்கும்
அவளது கற்பிற்கும்
அதுவே சாட்சி.

அவள் பேசுவாள்
என்றே நினைத்தேன்.
இங்கும்
நானே தோற்றேன்.

அழகா இருக்கிறீர்கள்
என்றேன்!
அவளும் சம்மதித்தாள்
ஒரு
நன்றிகூடச் சொல்லாமல்.
கடுப்பானேன்.
கேட்டுவாங்குவதற்கு முன்
அவளே சொன்னாள்
'நீங்களும்தான் . . .'

சிரித்தேன்!
சிலிர்த்தேன்!
ஜன்னலோரம் திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே பார்த்தேன்,
தோட்டத்தில் ஊன்றியிருந்த
கோமாளிப்பொம்மை
என்னையே பார்த்து சிரித்தது.

இவள்
நல்லவளா
கெட்டவளா??

பேச ஆரம்பித்தோம்

உரையாடல்,
அம்மாவின்
ஊரில் தொடங்கி
காதலில்
வந்து முடிந்தது.

சகலதையும் கேட்டேன்
சலிப்பின்றிச் சொன்னாள்.

ரயில் -
பயணத்தை முடிக்கும் நேரம்.
ஒரேயொரு
இறுதிக்கேள்விக்கு
சந்தர்ப்பம்.

'மீண்டும்
எங்கு சந்திப்போம்??'

இது
எனது கேள்வி.

அவள் சொன்னாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாளை
தாலிகட்டிய கணவன்
கனடாவிலிருந்து வருகிறார்!.'

வாய்வரை
வந்த வார்த்தை
தொண்டையோடே
திரும்பியது
எனக்கு.
எனக்கு நானே
சொல்லிக்கொண்டேன்
'இம்முறையும் - ஒரு
மூதாட்டியே வந்திருக்கலாம்
என்
மீத இருக்கையில்!'

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் முடிவுரை

(இலங்கையின் இறுதிக்கட்டப்போரில் தனக்கென இருந்த சகலதையும் இழந்த ஒரு பெண். முதல் தடவை எரிக்கப்பட்ட என் இதயம். அவள் கதைகளையும் கண்ணீரையும் பார்த்துவிட்டு வந்த நான் என் இணையத்தளத்தில் பதிந்த சில வரிகள் இவை.)

போரின் கொடூரம்
இவளில் புரியுது
இந்தப்பெண்ணின் புலம்பல்
நெஞ்சை உருக்குது.

நன்றாகப் பேசுகிறாள்
காரணம்
அவளிடத்தில்
மிஞ்சியிருப்பவை
வார்த்தைகள் மட்டும்தான்.

அவள் அழுவதாய்
அவள்
குரல் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் நீரில்லை.

காரணம் - அது

வற்றிவிட்டதாய் சொல்கிறாள்.

இரண்டு வருட

அழுகை,

இரண்டே நேர

உணவு — அதுவும்

உயிருக்காக அல்ல

சுற்றியுள்ள

உறவுகளுக்கு பயந்து.

இது மட்டும்தான்

இவள் வாழ்க்கை.

இவள்

கதை இதுதான்.

உயிரை எடுத்து,

பயத்தில்

கைகளில் வைத்து,

புதுமாத்தளன் நோக்கி பயணம்.

அனேகரைப்போல

இவளும் இழந்தவை

கொஞ்சநஞ்சமல்ல..

பதுங்கு குழிக்குள்ளே

பதுங்கியபடி

இறந்ததாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிசெய்யப்பட்ட
அம்மாவின் மரணம்,
எங்கு
மாண்டார் என்றே
தெரியாமல் போன
அப்பாவின் சாவு,
ஒரே குழிக்குள்
எறிந்துவிட்டுவந்த
கணவன் மகன்
இருவரின் சடலம்.
இப்போ —
இவர்களுக்காய்
அழுவதற்கு மட்டும் - இவள்
உயிரோடு!

கருமாரி
செய்வதற்கு
கிபீர் விடவில்லை!
இறுதியாக,
என் மகனை
முத்தமிடவேணும் - அந்த
எதிரிகள் விடவில்லை.

அவளிடத்தில்
காண்பதெல்லாம்
அழுகையும் அவலத்தையும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் சேட்டை
போட்டுக்கொள்கிறாள்!
மகன் படத்தை
அணைத்துக்கொள்கிறாள்!!
இவற்றை விட
என்ன இருக்கிறது
அவளிடம்.

கொஞ்சமேனும்
இரங்கியிருக்கலாம்
இந்த போர்.
இது
எனது ஆதங்கம்.
இறுதிக்
களையெடுப்பில்
நாற்றுக்களுமல்லவா
பிடுங்கி எறியப்பட்டன???

தூசு தட்டலில்
தூபங்களுமல்லவா
அணைக்கப்பட்டன???

இது
எவ்வகையில்
நியாயம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமேனும்
மனிதர்களைப்பார்த்திருக்கலாம்
இந்தப்போர்
மனிதாபிமானம் இல்லாவிட்டாலும்கூட...

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சுதந்திரம்.

ஒட்டறை போர்த்திய
ஒரு முழம்
கயிறு - இந்த
தமிழ் சுதந்திரம்.

அடிவிழுகையில்
குனிந்தே நின்றதால்
பையிலிருந்த
சுதந்திரம் - பத்திரமாய்
காப்பாற்றப்பட்டது.

ஓடியபோதும்
ஒட்டியே வந்தது
நம்
ஓடுகாலி சுதந்திரம்.

என்னவோ,
உயரத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்ததால்
பட்ட அடி
கொஞ்சம் அதிகம்.

சூம்பிப்போன
கனவுகளோடும்,
நாறிப்போன
இலட்சியத்தோடும்
எம் - கிழிந்த
பைகள் தாங்கும்
தமிழ் சுதந்திரம்
இன்னும் மரிக்கவேயில்லை
காவடி தோளேறு
தமிழ் கர்வம்
தலைக்கேறும்
மீண்டும்.

✶ ✶ ✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்பக்கம்

பத்துவருடம்
பிந்திய ஞாபகம்.
பக்கத்துவீட்டு
பத்மா அக்காவைத்தவிர
மீதியெல்லாம்
மறந்தேபோச்சு
எனது ஊரில்.

தாமரை போர்த்திய
பரந்த குளம்,
நடை சொல்லித்தந்த
உயரக் குளக்கட்டு,
விரும்பிக் குளித்த
ஆலடி இறக்கம்,
விரும்பாமல் போன
வீதியோர நேசரி,
வேண்டுமென்றே கலைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரத்து தேனீ,
மெத்தையாய் புரண்ட
வைக்கோல் சூடு,
பயந்து ஓடிய
மீசை கிழவன்?,
கதைகள் சொல்லிய
மீனம்மா கிழவி,

ஊஞ்சல் போட்டியில்
நான் ஆடிய
ஆலமரத்து விழுது,
ஊர்மனைக்குள்
உலா வந்த
மாட்டுவண்டில் சவாரி,
முதல் குடித்து
முந்தி ஏப்பம் விட்ட
தனிப்பனைக்கள்ளு,
நோண்டி நோண்டி
விரலை பழுதாக்கிய
முத்திய நொங்கு,
அரிதாய் கிடைப்பதாய்
ஆர்வப்பட்டு சாப்பிட்ட
இளம் தென்னங் குருத்து....

ஆசைப்பட்டே
பூசிக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்நிலச் சேறு,
அடிபுடிப்பட்டு
பறித்துத்தின்ற
பொங்கல் தினச் சோறு,
சேற்றில் இறங்கி
ஏர் பிடித்த
எருமைமாட்டு உழவு,
அனுமதியின்றி
மாங்காய் பறித்த
திருட்டுக் களவு,
நாற்று நடப்போய்
வரம்பில் விழுந்த
முதல் சறுக்கல்,
சிரித்ததற்காய் - நண்பன்
தலையை உடைத்த
சேற்றில் கிடந்த கல்...

ஒளிந்து விளையாடிய
எருக்கலைப்பத்தை,
ஓடோடிக் கலைத்த
கிளுகிளுப்பைக் கூடு,
வீடுவரை கொண்டுவந்த
கானாங்கோழி இறைச்சி,
நீந்திப்பறித்த
பிஞ்சுத் தாமரத்தங்காய்,
சண்டைபோட்டுத் தின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதாரிப் பொரியல்,
புகையிலை கொடுத்து
ஆடவைத்த ஓணான்,
பாசமாய் வளர்த்த
கருமை நிற மைனா,
கெட்டவார்த்தை படிப்பித்த
நண்பன் வீட்டுக் கிளி,

பார்த்துப் பார்த்து
வயிறு நிறைத்த
நிலாக்கிழவி,
அ ஆ எழுதி
ஆறுதலாகப்படித்த
முற்றத்து மணல்,
ஆறு மணியானதும்
ஊரையே பகலாக்கும்
அரிக்கன்லாம்பு வெளிச்சம்,
ஒய்யாரமாய்
ஓய்வெடுக்கும்
மெழுகிய திண்ணை,
ஒவ்வொரு காலையிலும்
வஞ்சகமின்றி பூத்துக்குலுங்கும்
கொல்லையோரத்து மல்லிகை...

நான் வளர்த்த
நாய் - இரவில்
கேட்டுப்பயந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய் - தினமும்
தீனியிட்ட
கோழி — என்
பக்கத்து வீட்டு
தோழி...

இன்னும்
நெஞ்சில் நீள்பவை
இந்த
ஞாபகங்கள்தான்...

✶✶✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் முடிவதில்லை.

இன்று தொடங்கிய
பயணமல்ல — அது
நாளை முடிவதற்கு.

எமது பயணங்களுக்கு
எனது வயதாகிறது..

நடந்து ஓடி
பழக்கப்பட்டவர்கள்
ஆதலால் - எங்களுக்கு
நரம்புகள் இழுக்கவில்லை
எலும்புகள் பழுக்கவில்லை
இரத்தம்கூட கொதிக்கவில்லை
இன்னும்
ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இனம்
எமது குலம்
எமது மொழி
எமது மண்
இதற்காகத்தானே
இத்தனை ஓட்டம்...

சொத்தை இழந்தோம்
செத்துவிடவில்லை.
மண்ணை இழந்தோம்
மாண்டுவிடவில்லை.
மானமிழந்தோம்
மண்டியிடவுமில்லை.

ஓடிக்கறுத்த இரத்தமும்
ஓங்காளிக்கின்ற உயிரும்
ஊட்டமற்ற ஊனும்
ஓங்கிமிதித்து
ஒடுக்கப்பட்டாலும்
உணர்வுகள் மட்டும்
எமது
உரிமைக்காய்
ஓப்பமிட்டுக்கொண்டே இருக்கும்.

எம் சதைகள்
பிய்க்கப்பட்டன,
உறுப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனுண்ணிகளுக்காய்
ஏலமிடப்பட்டன,
பருந்துகளும் நரிகளும்
எம்
தொடை தசைக்கும்
தொப்பை ஈரலுக்கும்
போட்டி போட்டன,
இதற்குள்
தமிழன் குருதி
தனி ருசியென
குடித்து முடித்து
ஏப்பம் விடும்
எருமைக்கூட்டம்
ஒரு புறம்,
எமது பெண்கள்
கற்பவதிகள் என்பதற்காகவே
அதை
களவாடிப்போக
கட்டிலடியிலே காத்துக்கிடக்கும்
காடையர்கள்
இன்னுமொரு புறம்...
இத்தனைக்குள்ளும்
நாங்கள்
மனிதர்களாகவே வாழ்ந்திருக்கிறோம்!
எத்தனை
திறமைசாலிகள் பாருங்கள்
தமிழர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்பட்டாலும்
எம் மண்
புழுதியாலேயே
மருந்திடுபவர்கள் நாங்கள்.

இழப்பும் களைப்பும்
எமக்கு ஒன்றும்
வேதனையல்ல.
ஏனெனில்
தீயில் கூட
நடந்து பழகியவர்கள்
நாங்கள்.
எமக்கு
கஷ்டம்கூட
கடினமானவை அல்ல.
பயம் ஒன்றும்
புதியதல்ல.
இலவம்பஞ்சால்
தீயணைப்பவர்கள் நாங்கள்.
திராவகத்திற்குள்ளே
தீபம் ஏற்றக்கூடியவர்கள்
நாங்கள்.

அடிவயிற்றில் உதைத்தாலும்
பிள்ளையை
முதுகில் சுமப்பவர்கள்
எமது தாய்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களா
பயந்தவர்கள்???

மண்ணில் வீழ்ந்தாலும்
மடிந்து போவோம்
மானங்கெட்டுப் போகமாட்டோம்.!!

அகதி வாழ்க்கையும்
அனாதை அவஸ்தையும்
எமக்கு
இரு வேறு கொடைகள்.

எமது பயணம்
எதுவரைக்கும்?
எங்குபோய் முடியும்
இந்தத்துயரம்?
எதை இழந்தோமோ
அதைப் பெறுவோம்.
எதைத் தொலைத்தோமோ
அதை அடைவோம்
விரைவில்.

இழந்தவர்கள் நாங்கள்
மீண்டும் பெறும்வரை
கர்ச்சித்துக்கொண்டேயிருப்போம்.
காலம் நம்மை
திரும்பிப் பார்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி மீண்டும்
நம்
தோள்களில் ஏறும்.
முதுகு பொறுத்தாலும்
முந்தானை குலைந்தாலும்
விழிகள் பிதுங்கினாலும்
விடியல் ஏமாற்றினாலும்
எம்
உணர்வுப் பயணம்
இனிதே தொடரும்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு காதல் காவியம்

சோம்பல் முறிக்கும் மாலைப்பொழுது
தங்கச்சூரியனும் தாண்டமுடியாக்கடலும்
கொஞ்சம்கூட வெட்கமின்றி
ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி
முத்தமிட்டுக்கொள்ளும் நேரம்,
நானும் அவளும்
ஒரே பாதையில் நீண்ட நாட்களுக்குப்பின்
பொடி நடையாக எதையோ நோக்கி..

இடைநடுவே,
காதலைப்பற்றி விளக்கம் கேட்டாள் அவள்.
சொல்லத்தொடங்கும் முன்னே
அபசகுனமாய் ஒருகுரல்
அருகிலிருந்த புதரிலிருந்து.

'காதல் ஒழிக, காதல் ஒழிக"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதருக்குள் என்ன வஞ்சகப்புகழ்ச்சி..
யாரிடமிருந்து... எதற்காக..

பொடிநடையையும் கடலைப்பொடியையும்
கொஞ்சம் நிறுத்தி
குரல் வந்த திசை நோக்கினேன்.

நிலத்தில் ஒரு இளைஞன்
கையில் ஒரு போத்தல்
வாயில் வெள்ளைச்சுருட்டு
மூக்கிலும் வாயிலும் புகை
விழிகள் வழியே நீர்.

போதை என கண்டேன்
இருந்தும் நம்பிக்கையில்லை - காரணம்
எப்படி
இப்படிப்போதையிலும்
அப்படியொரு ஞானம் அவனுக்கு....?
இதைத்தான் போதைஞானம் என்பதா..?

அருகில் போய்
இருப்பதை இயம்பு
என் வேலையை ஆரம்பித்தேன்.

பாவம் அவன்.
அவனுக்கு
நானும் பாவம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம்
நாலும் ஒரு பெண்ணோடு நின்றுகொண்டிருப்பது...
சரி
என்ன பிரச்சனை என்றுகேட்க
இனிதே ஆரம்பமானது
அவன் காதல் காவியம்.
அதிகம் வார்த்தைகள் இல்லை
மொழிநடை சிக்கல் இல்லை
எதுகையும் இருக்கவில்லை
மோனையும் தெரியவில்லை
இரண்டே வரியில்
சூப்பராக விபரித்தான்
அவன் (கா)சாதல் காவியத்தை.

'நேற்றுவரை என்னோடு வந்தவள்
இன்றுமுதல் இன்னொருவனுடன் போகிறாள் அண்ணா..."

இரண்டு வார்த்தை
இருதயத்தைக்கிழித்தது.
இதற்குப்பிறகும் - காவியத்தை
முழுதாகக்கேட்கவேண்டுமா?
என்ன சொல்வது இந்த உள்ளூர் சாஜகானிற்கு..?
என்ன சொன்னாலும்
பெண்ணை இழந்தவன் வலி
பல ஆண்களுக்கு இரண்டாம் வாய்ப்பாடுதானே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் சொல்ல
இவன் என்ன
உறவை இழந்தவனா?
தன்னையல்லவா இழந்து நிற்கிறான்!
அவளை மறக்கச்சொல்வதா - இல்லை
அவனை மறக்கச்சொல்வதா ??
மொத்தத்தில் இரண்டும் ஒன்றுதானே.

ஆறுதல் சொல்ல
அதிக நேரம் யோசித்தும்
தோற்றே போயின என் வார்த்தைகள்.
தூக்குக்கைதியின் இறுதி ஆசைபோல்
இறுதியாக சொன்னேன்.
'கவலைப்படாதே நண்பா,
உன் காதல் சரிதான் - ஆனால்
நீ
ஒரு 'பெண்ணை" பார்த்து காதலிச்சிருக்கலாம்.."

வேறு என்ன சொல்வேன்...?
இருந்தும் - நான் அவனுக்கு
ஆறுதல் கூறப்போய் - அவன்
இயலாமையை காட்டிக்கொடுத்துவிட்டேனோ..
என்கின்ற படபடப்பும் எனக்குள்.

நான் முடிக்க
என்னவள் ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சரியா சொன்னீங்க..
அவன் ஒரு 'பெண்ணை''க் காதலிச்சிருக்கலாம்
உங்களைப்போல...."

இதற்குவேறு நான் என்ன சொல்வேன்?
சரி என்று தலையை ஆட்டி மாட்டிக்கொள்வேனா?
நானோ
உண்மையை நம்பி பிழைப்பு நடத்துறவன்.
எனது பதில் பொய்யானால் - நானே
பொய்க்கு உடந்தை போனதாய்
மனச்சாட்சி
பரபரப்பாய் பேசுமே...

இல்லை என்றால்
- நாளை
அவனுக்கு அருகில் போத்தலோடு
நானும்
சத்தியாக்கிரகம் செய்ய நேரிடுமே..

என்ன சொல்வது ???
என்னவள் பிரேரணைக்கு....

யோசித்துப்பார்த்தேன் - இறுதியில்
ஒன்றுமட்டும் புரிந்தது.
அவளை இழந்தவன் தப்பித்துக்கொண்டான்,
இவளை மணந்தவன் மாட்டிக்கொண்டேன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காத காதல்

உன்னை
பார்த்தபோது
மறைத்துக்கொண்டாய் - முகத்தை
உன்
இதயத்தில் இருந்த
நான் மட்டும்
அப்படியே தெரிந்தேன்
தெட்டத்தெளிவாய்.

வேண்டாம் என்றாய்
என்னை.
வேண்டும் என்றேன்
உன்னை. - பின்னர்
பார்ப்போம் என்றாய்

கனவில் மட்டும்
கனர் கனரா்ய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துபோகும் நீ
ஏன் -ஏன்
விதியில் மட்டும்
கறுப்பு வெள்ளையாய்
வருகிறாய்?

காதல் வேண்டாம்
என்றால்
விட்டுவிடு,
நான் வேண்டாம்
என்றால் - என்னை
கொன்றுவிடு.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றுவிடுங்கள்.

எப்படி
உண்மையாகவே
பேசுகிறார்கள்
அழகிய பொய்களை??

உயர்ந்த உயிர்
இப்போ
உருவம் மாறியது
எப்படி?

பொய்யான வாழ்க்கை
மலிந்துகிடக்கிறது.
இதற்குள்
உண்மைகள் மட்டும்
பொசுங்கித்துடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் ஒரு
மேடையென்றால்
மனிதர் தானே
நடிகர்கள்!
ஆனால் இப்போ
மனிதமுமல்லவா நடிக்கிறது?

போலிமுகங்களை
ஒப்பனை செய்து
அழகாக பொருத்தியிருக்கிறார்கள்
சில
மனிதர்கள்.

ஒப்பனை முகங்களும்
பொருத்தப்பட்ட சிரிப்புக்களும்
மெழுகிப்பூசிய வார்த்தைகளும்
உண்மையல்ல என்பதை
எப்பொழுது உணர்வார்கள்
இந்த பொய்மனிதர்கள்?

இவர்கள்
சிரிப்பில்
மகிழ்ச்சியில்லை.
பார்வைகளில்
நேர்மையில்லை.
கண்ணீரிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையில்லை.
புகழ்ச்சியில்
உண்மையுமில்லை.
வார்த்தைகளில் கூட
யதார்தமில்லை.
ஒட்டுமொத்தத்தில்
இவர்கள் வாழ்க்கையில்
பயனேயில்லை.

நான்
மனிதர்களோடும்
வாழ்ந்து பழகியவன்.
எந்திரர்களையும்
பார்த்துப் படித்தவன்.
இருந்தும்
இந்த
போலி மனிதர்களுடன்
வாழ முடியவில்லை.
ஆனாலும்
முயற்சிக்கிறேன்!!
இல்லையெனில்
நீங்களே கொன்றுவிடுங்கள்.
இவர்களுடன் வாழ்வதைவிட
ஆறடிக்கிடங்கில்
அமைதியாய் உறங்கலாம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொட்டைமாடி காதலும் முடிந்துபோன கற்பனையும்.

விசும் காற்றும்,
விடியா இரவும்,
விண்ணுக்கும் மண்ணுக்கும்
விட்டு விட்டு பாயும்
மின்மினியும்,
தொட்டு வருடும்
பின் வீட்டுத் தென்றலும்,
சோம்பேறியாக்கியது — என்
வாய் வரை வந்த கவிதையை,

அவளும் நானும்
அந்த —
நிசப்த இரவில்
ஒருவருக்குள் ஒருவார்
தொலைந்துகொண்டு,
தொல்லையின்றி பிரசவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுகை உணர்வின்
பரவசத்துக்குள்,
ஏதோ வைத்த ஒன்றை
தேடுவதாய் - இருவரும்!!!
உண்மைதான்.
மொட்டைமாடிக் காதல்
மோட்சவாசல்தான்..

இந்த
ஒற்றை இரவுக்குள்
இத்தனை காமமா??

காதலியாய் பார்த்துப் பார்த்து
பழகிய கண்கள்,
கொஞ்சம் கூசுகிறது – அவளை
முதல் முறையாக
மனைவியாய் பார்ப்பதற்கு..

அவள்
முகம் மட்டும்
மங்கலாய் தெரிய – ஏனோ,
மீதம் அனைத்தும்
தெளிவாகவே தெரிகிறது
இந்த
பௌர்ணமி இரவிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு காலமும்
உடலை மூடிய
அவள் முந்தானை
இப்போ,
ஐந்து மீட்டர் தொலைவில்
அனாதரவாய்...

அவள் அருகில் இருக்கிறாள்.
காரணம்
என்
சுவாசப்பைக்குள்
சுகந்திர வாசம்,
இரத்தக்குழாய்களுக்குள்
அடிதடி வேகம்..

அவள் வெட்கத்தை
மேலோட்டமாய் காட்டியவள்
அன்றுதான் - முதல் முறை
வெள்ளோட்டமாய் காட்டினாள்.

பிரமன்
எப்படி படைத்தான்
இத்தனை இன்பங்களை
ஓரிடத்தில் வைத்து
வஞ்சனை செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடும் தூரம்
அவள்.
என்னை தொட்டுப்பார்ப்பதும்
அவள்.
நானோ
சுவாசிப்பது
அவள் மூச்சு,
என்
வாய்களுக்குள்
அவள் பேச்சு.

காதலைக்கொடுத்தாள்
காமத்தையும்
இவளே கொடுத்தாள்.
அவள்
மனதைப்பார்த்த நான்
இன்றுதான்
அவளையே பார்த்தேன்.
மொட்டைமாடி காதல்
மோட்சவாசல்தான்..

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைக்காதல்

மீனம்மா உன்னைப் பார்க்க
மீன் கொண்டு வந்தேனே
மீனோடு என்னைச் சேர்த்து
மீதமின்றி தந்தேனே.

காரிருளில் கடலின் மேலே
கவனம் எனச் சொன்னாயே
காத்திருந்த வேளைகளில்
காணாமல் நீ போனாயே.

கண் சிமிட்டும் மாலையிலே
கடல் பக்கம் நீ வருவாயே
கட்டியணைக்க எத்தனித்தால்
கவனம் காட்டி சிரிப்பாயே

நான் வீசும் வலைகளெல்லாம்
மீனைமெல்ல வளைத்துப்போடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பார்வை வலைகளெல்லாம்
கந்தைபயல்லவா துளைத்துப்போடும்.

படகிலேறி வடக்கேபோனால்
பயத்தில்கிடக்கும் உந்தன் நினைப்பு
படகைவிட்டு தரையில்வந்தால்
சாயமாய்ப்போகும் சலவைச்சிரிப்பு.

மீனைப்பிடித்து படகில்போட்டால்
விடிந்து கையில் காசு புரளும்
விண்மீனே உன்னை மடியில் சாய்த்தால்
விடிய விடிய சொர்க்கம் புரியும்.

மீனும் நானும் தொழிலில் பந்தம்
நீதான் எனக்கு வாழ்வில் சொந்தம்
நீரிலும் நடக்க நித்தம் ஆசை
நீதாண்டி வாயில் என்றென்றும் பாசை.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைப் பெண்ணும்
## தோற்றுப்போன ஆணும்

தன்
உடல் மறைக்க
ஆடையணிகிறாள்.
ஆடைதெரியவில்லை
அவள்
உடல்மட்டும்
அப்படியே தெரிகிறது.

அவள்
மானத்தை மறைக்கும்
ஆடையிலே,
நெஞ்சுப்பொத்தாலும்
தொடைப்பொத்தாலும்
நிரந்தரமாகவே இல்லை.
இது
நாகரீகம் என
அனாகரீகமாகப்பேசுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாடைக்கும்
வெளியாடைக்கும்
வித்தியாசமே இல்லை
அவள் அணியும்
ஆடைகளில்.

அவள்
கையிலிருக்கம்
கைக்குட்டையும்,
இடுப்பிலிருக்கும்
காற்சட்டையும்
ஒரே நீளம்
ஒரே அகலம்.

அவள்
கட்டழகு
கணவனுக்கு மட்டுமல்ல
கடைக்காரனுக்கும்
தெரியும்.

மானத்திற்கும்
ஆடைக்கும்
சம்மந்தமேயில்லை
இவள்
அகராதியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்,
வெளியில் தெரிபவை
அவள்
அங்கங்கள் மட்டுமல்ல!
வெளுறிப்போன
நம்
கலாச்சாரமும்தான்!!

குட்டைப் பாவாடையில்
குதூகலமாய்ப் போகிறாள்
அவள்.
கணவன் மட்டும்
முக்காட்டோடு
முனங்கிக்கொண்டிருக்கிறான்
வெளியே வரமுடியாமல்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலும் ஆசிரியரும்

இலக்கியச் சந்தையிலே
கால் கோலிடும் மன்னார்
நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த
செல்வன் பி.அமல்ராஜ் அவர்கள்
மாணவப் பருவத்திலிருந்து
தமிழிலக்கியத்தை ஆழமாக்கிக் கொண்டவர்.
வாசிப்பினாலும் யோசிப்பினாலும்
எழுத்துலகில் நுழைந்து கொண்டார்.
சமூகத்தின் மீதான எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றம் அடையும் போது,
கருத்தியலாளர்களின் எண்ணத்து
உணர்வுகள் எழுத்துக்களாய் பரிணமிக்கின்றன.
அந்த வகையில் இவர்
பல பணிகளுக்கு மத்தியிலும்
தேடிப்படிக்கும் ஆர்வமுடையவர்.
அதனால் எழுந்த சீர்திருத்த
சிந்தனையாலும் இரண்டு நூல்களை
ஒரே தடவையில் வெளிக்கொண்டு வருகிறார்.
சாதிக்கத் துடிக்கும் இவ் இளைஞன்
எழுத்துலகிலும் உயர்ந்த எல்லையிட்டு
பகுத்தறிவுச் சிந்தனையில்
சமூக மனமாற்றத்தையும்
சாதி, சமய வேற்றுமைகளுக்கு எதிராகவும்
தன் இலக்கியப் பணி தொடர்ந்து
மனிதரில் மனிதம் எனும்
மனித நேயச் சிந்தையை
நோக்கியதாய் இவர் எழுத்துலகு
அமையவேண்டுமென எதிர்பார்த்து
வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றேன்.

*V.S.*சிவகரன்

**பொதுச் செயலாளர்.**
Digitized by Noolaham Foundation.
**மன்னார் தமிழ்ச் சங்கம்**
noolaham.org | aavanaham.org